2021 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடந்த ஆண்டிலேயே நான் கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கை, செவி சாய்க்கப்படவில்லை' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் தெரிவித்தார்கள். என்றைக்குமே, யாருடைய கோரிக்கையாக இருந்தாலும், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்பதிலே உறுதியாக இருக்கிற அரசுதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் பரிவுள்ளம் கொண்டவர். அவர் மானியக் கோரிக்கையின்போதே எந்த அளவுக்கு எல்லோரையும் கவர்கின்றவண்ணம் பேசினார் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, சங்கராபுரத்திலே இருக்கக்கூடிய உங்களுடைய மக்களையும் கவர்கின்றவண்ணம், 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை நிச்சயமாகப் பெற்றுக் கொண்டு, அந்த இடத்தை ஒதுக்கித் தருவதற்கு, அவர்கள் ஆவன செய்வார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள், நீதி நிருவாகத் துறை, உள் துறை மூலமாக மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே சார்பு நீதிமன்றம் வருவது குறித்து கோரிக்கைகளை நீங்கள் மாண்பமை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வையுங்கள். அதன் பின்னர், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

தார்ச் சாலை அமைத்தல்

***880— மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், ஆணானந்தல் முதல் பொரிக்கல் துரிஞ்சல் ஆறு வரை உள்ள இரண்டு கிலோ மீட்டர் தூரமுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், ஆணானந்தல் ஊராட்சியில், ஆணானந்தல் முதல் பொரிக்கல் துரிஞ்சல் ஆறு வரையுள்ள 2,030 மீட்டர் நீளம் கொண்ட சாலையானது, 314 மீட்டர் நீளம் கொண்ட இரயில்வே இருப்புப் பாதையை ஒட்டிய நிலப் பகுதியில் மண் சாலையாக உள்ளது. மீதமுள்ள 1,216 மீட்டர் நீளமுள்ள சாலையில் 300 மீட்டர் சேதமடைந்த தார்ச் சாலையாகவும், 640 மீட்டர் சேதமடைந்த ஜல்லி சாலையாகவும் உள்ளது. மேற்படி சாலை, 10 ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே, இருப்புப் பாதையை ஒட்டியுள்ள சாலையைத் தவிர்த்து, மீதமுள்ள 1,216 மீட்டர் நீளமுள்ள சாலையை இணையதள சாலை பதிவேடு குறியீட்டு எண் R65, 2021-2022 ஆம் நிதியாண்டு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்-*Tamil Nadu Rural Roads Improvement Scheme (TNRRIS) *அல்லது ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட நிதி வருவாய்* (SCPAR) *திட்டத்தின்கீழ் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக தரமுயர்த்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், 314 மீட்டர் நீளமுள்ள இரயில்வே துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் அமைந்துள்ள மண் சாலையினை, இரயில்வே துறையினரிடமிருந்து தடையில்லாச் சான்று தரப்படும்பட்சத்தில், சாலையினை மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணானந்தல் முதல் பொரிக்கல் துரிஞ்சல் ஆறு வரை செல்கின்ற சாலையில்தான் மாணவர்களெல்லாம் ஆணானந்தலில் இருக்கின்ற பள்ளிக்குச் செல்கிறார்கள். அந்தச் சாலை மிக மோசமாக இருக்கின்ற காரணத்தால், மாணவர்கள் எல்லாம் பள்ளிக்குச் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். கடந்த காலங்களிலே பலமுறை*

2021 செப்டம்பர் 1]

கேட்டும், அவை போடப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கின்ற கிராமப்புற மக்களும் பயன்பெறக்கூடிய வகையிலே, மாணவர்களும் பள்ளிக்குச் செல்லக்கூடிய வகையிலே, அந்தச் சாலையை விரைவில் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய பேரவையினுடைய மாண்புமிகு துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள், தன்னுடைய தொகுதி மக்களின் நலனுக்காக பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, பல வினாக்களையும் தொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட இந்த வினாவைப் பொறுத்தவரையில், நிச்சயமாக, நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியையும் தந்திருக்கிறோம். குறிப்பிட்ட 314 மீட்டர் நீளமுள்ள சாலைக்கு இரயில்வே துறையின் சம்மதத்தைப் பெறக்கூடிய பணியை மட்டும் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒருங்கிணைந்து செய்து தந்தால், முழுமையான சாலை அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே திருவண்ணாமலை மாவட்டத்தில்தான் 700 கிலோ மீட்டருக்கும் அதிகமான கிராமச் சாலைகள் இருக்கின்றன. பல்வேறு மாவட்டங்களிலே அவையெல்லாம் Highways-க்கு மாற்றப்பட்டு சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், என்னுடைய தொகுதியிலே மட்டும், திருவண்ணாமலை ஒன்றியத்திலே 12 கிலோ மீட்டர்; கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்திலே 21 கிலோ மீட்டர்; துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலே 30 கிலோ மீட்டர் ஆக, 63 கிலோ மீட்டர் அளவிற்கு கிராமச் சாலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. கிராமச் சாலைகளுக்கு அதிகளவில் Panchayat Union-லிருந்து நிதி வராத காரணத்தாலும், கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிக நிதி ஒதுக்காத காரணத்தாலும் இந்தச் சாலைகளெல்லாம் போடப்படாமல் இருக்கின்றன. ஆகவே,

இந்தச் சாலைகளையெல்லாம் RR-க்கு மாற்றியோ அல்லது Highways-க்குக் கொடுத்தோ அமைத்துத் தர வேண்டும். குறிப்பாக, இந்தச் சாலைகள் விழுப்புரம் மாவட்டத்தை ஒட்டியிருக்கின்ற சாலைகள். அந்த மாவட்டத்தைச் சார்ந்த Collector, ஒவ்வொரு முறையும் மாவட்டத்தை ஒட்டியுள்ள சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருதி அந்தக் கூட்டங்களை நடத்தினால்தான் இந்த சாலைகளையெல்லாம் போட முடியும். ஆகவே, மாவட்டத்தை ஒட்டியிருக்கின்ற பகுதிகளிலே, இதுபோன்ற நிலை இருக்கக்கூடாது. இது மக்களுக்கு அதிகளவு சிரமத்தைத் தருகிறது. இதுகுறித்து நெடுஞ்சாலைத் துறையுடன் பேசி, எந்தெந்தச் சாலைகளை ஒப்படைக்க முடியுமோ, அவற்றை ஒப்படைக்க வேண்டும். என்னுடைய திருவண்ணாமலை மாவட்டத்திலேதான் அதிகளவு கிராமச் சாலைகள் போடப்படாமல் இருக்கின்றன. ஆகவே, மக்களின் தேவையைக் கருதி, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதியிலே, ஆணானந்தல் முதல் பொரிக்கல் துரிஞ்சல் ஆறு வரையுள்ள சாலையை, இரயில்வே துறையிடமிருந்து அனுமதி பெற்று அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். நீங்களே இரயில்வே துறையிடமிருந்து அனுமதி வாங்கித் தர வேண்டுமென்று கேட்கிறார்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், தன்னுடைய மாவட்டத்தின் நிலைமைகளை, தொகுதியின் நிலைமைகளை, சாலைகளின் நிலைமைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன ஒரு யோசனை; அதாவது, ஊரக வளர்ச்சித் துறைக்கு வரக்கூடிய நிதி, பற்றாக்குறையாக இருக்கிறது என்பதை அவர் உணர்ந்து சொல்லிய அந்த வார்த்தைகளின் அடிப்படையில், வழக்கமாக இருப்பதைப்போல ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அமைக்கப்படுகின்ற சாலைகளைத் தவிர்த்து, எஞ்சியிருக்கக்கூடிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறை மூலமாக பராமரிக்கப்படுவதற்கான பேச்சுவார்த்தையும் நடந்து வருகின்றது. ஆகவே, சம்பந்தப்பட்ட கேள்விக்கு விடை காண்பதற்கு, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் அந்த மாவட்டத்தைச்

2021 செப்டம்பர் 1]

சார்ந்தவர்கள். நிச்சயமாக, ஊரக வளர்ச்சித் துறையோ அல்லது நெடுஞ்சாலைத் துறையோ உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்து, திருவண்ணாமலை மாவட்டம் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மாற்றப்படும். ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எந்தவிதமான ஐயப்பாடும்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, புனித தோமையார் மலை ஒன்றியத்தில் பொழிச்சலூர், திரிசூலம் என இரண்டு மிகப் பெரிய ஊராட்சிகள் இருக்கின்றன. இவற்றில், மக்கள்தொகை 50 ஆயிரம், 30 ஆயிரம் என்ற அளவில் இருக்கிறது. அந்த ஊராட்சிகள், சென்னைப் புறநகரில் உள்ள விமான நிலையம் பின்புறம் உள்ள வளர்ச்சியடையாத ஒரு பகுதி. அந்த இரண்டு ஊராட்சிகளும் தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆனால், அதற்குப் போதுமான நிதி ஆதாரம் இல்லை. தற்போது தேர்தலும் நடைபெறவிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாநகராட்சியோடு சேர்த்ததற்குப் பிறகு பிரச்சினைகள் எல்லாம் முடிந்துபோய்விட்டன. நகராட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் செய்து தருவார்கள்.*

திரு. இ. கருணாநிதி: *இல்லை, ஐந்தாண்டுகளுக்குப் பிறகுதான் அதைச் சேர்த்துக்கொள்வார்கள் என்று நினைக்கின்றேன். ஆக, அதுவரையிலும் அங்கு நிதிப் பற்றாக்குறை; எனவே, அந்தச் சாலைப் பணிகளையெல்லாம் செய்து தருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள், ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த*

ஒரு துணைக் கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். குறிப்பாக, அவருடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், இரண்டே இரண்டு ஊராட்சிகள்தான் இந்தத் துறையின் சார்பிலே இருக்கின்றன. அதிலும், குறிப்பாக, தற்போது தாம்பரம் நகராட்சியை மாநகராட்சியாக அறிவித்துள்ள இந்தச் சூழ்நிலையில், அந்தப் பகுதிகள் மாநகராட்சிப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இருக்கின்ற அந்த இரண்டு ஊராட்சிகளில் மக்கள்தொகை அதிகம் இருக்கின்றது என்பதை உணர்ந்து, குறிப்பாக விமான நிலையம் போன்ற கேந்தரமான பகுதிகள் அங்கே அமைந்திருக்கின்ற காரணத்தால், நம்முடைய நகர்ப்புர வளர்ச்சித் துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் இணைந்து அந்தத் தேவைகளை பூர்த்தி செய்யும் என்ற உறுதியைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

கால்நடை மருத்துவக் கல்லூரி

***517—திரு. S. பழனி நாடார்:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரியில் கால்நடை